இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்திச் சபை

வருடாந்த அறிக்கை

2021

அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

354/2, நிபுணதா பியச, 7ம் மாடி, எல்விட்டிகெல மாவத்தை, கொழும்பு 05.

நிறுவனத்தின் பின்புலம்

நிறுவனம்	: இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை
அமைச்சு	: அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
முகவரி	: 354/2, 7வது மாடி, நிபுணதா பியச, எல்விடிகல மாவத்தை, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05
மின்னஞ்சல் முகவரி	: director.nhrdc@gmail.com
இணையத்தள முகவரி	: www.nhrdc.gov.lk
தொலைபேசி	: 0112595679
பக்ஸ்	: 0112595680
கணக்காய்வாளர	: கணக்காய்வாளர் நாயகம் தேசிய கணக்காய்வு அலுவலகம்
வங்கியாளர்கள்	: இலங்கை வங்கி மக்கள் வங்கி

தொலைநோக்கு

துாரநோக்கு எங்களது எதிர்கால தொழில்படை தயார்

நோக்கம்

அபிவிருத்தி, அமுல்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் பயனுள்ள கொள்கைகளை நெறிப்படுத்துவதோடு புதுமையான உத்திகளைக் கையாண்டு எமது நாட்டின் மனிதவளத்தினை அபிவிருத்தி செய்தலாகும்.

பெறுமதிகள்

குழுக்கலாசாரம்

வாடிக்கையாளர் முக்கியத்துவம்

படைப்பாற்றல்

பாகுபாடு காட்டாமை

தலைவரின் செய்தி

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையானது மனிதவள அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றுவதற்காக 1997 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க மனிதவள அபிவிருத்தி சபைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். மனிதவள மேம்பாடு தொடர்பாக கொள்கை வழிகாட்டுதல்களையும் ஆலோசனைகளையும் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கும் அரசாங்கத்திற்கும் வழங்குவதே சபையின் முக்கிய நோக்கமாகும்.

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையானது ''சுபீட்சத்தின் நோக்கு'' இற்கு இணங்கும் வகையில் தேசிய மனிதவள அபிவிருத்திக் கொள்கையை மேம்படுத்துவதற்கும் புதிய கொள்கையைத் தயாரிப்பதற்குமான வரைவு ஆவணத்தைத் தயாரித்துள்ளது. இத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு ஆலோசனைக் குழு மற்றும் செயற்பாட்டுக் குழு நியமிப்பதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

பட்டதாரி பயிலுனர் திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்களை வினைத்திறனுடன் பயன்படுத்துதல் தொடர்பான கற்கை

இந்த முயற்சியின் முக்கியத்துவத்தை சபை அறிந்துகொண்டதனால், இந்த ஆய்வின் முக்கிய நோக்கம், புதிதாக நியமிக்கப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு விதப்புரைகளை பரிந்துரைத்தல் மற்றும் வினைத்திறனான பயன்பாட்டை ஆராய்வதாகும்.

அரச துறையில் தொழில்நுட்ப அலுவலர் பதவிகளில் காணப்படும் பற்றாக்குறைக்கான பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள் மற்றும் பரிந்துரைகளை அறிந்து கொள்வதற்கான கற்கை

இந்தக் கற்கையின் பிரதான நோக்கம் தற்போதுள்ள தொழில்நுட்ப அலுவலர்களின் பற்றாக்குறையையும் அரச துறையில் உள்ள தொழில்நுட்ப அலுவலர் பதவிகளின் பற்றாக்குறை அதிகரிப்பதற்குத் தாக்கம் விளைவிக்கும் காரணிகளையும் அடையாளம் காணல் ஆகும். அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அரசாங்கத்தின் அமைச்சின் செயலாளருக்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிப்பதற்கு சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

மேலும், மனிதவள அபிவிருத்தி மீதான நிபுணர் குழு, குழுக்கள் மற்றும் ஆலோசனையாளர்களை நியமிப்பதற்கு இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம், இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபைச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அவசியமானபோது அவர்களுடைய சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு மனிதவள அபிவிருத்தி தொடர்பான நிபுணர் குழு, குழுக்கள் மற்றும் ஆலோசனையாளர்களை உருவாக்குதல் ஆகும்.

மேற்குறிப்பிட்டதற்கு மேலதிகமாக, தொடர்புடைய பங்குதாரர்களின் தகவல் இடைவெளியைப் பூர்த்திசெய்வதற்காக இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபை ஆண்டுதோறும் புள்ளிவிபரங்கள் மற்றும் மனிதவள மூலதன விபரங்களை வெளியிடுகின்றது. 2021இல் கடைசி புள்ளிவிபர விபரங்கள் மற்றும் மனிதமூலதன நுண்ணறிவு விபரங்களை இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் இணையதளத்தில் வெளியிட்டது.

சிந்தக்க எஸ்.லொக்குஹேட்டி
தலைவர்

பொருளடக்கம்

1. நிறுவன பின்னணி மற்றும் நோக்கம் 1

2. மனிதவள அபிவிருத்தி சபையின் நிறுவனக் கட்டமைப்பு 4

3. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை – நிறுவன கட்டமைப்பு 7

4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் ஆளணி மற்றும் அவர்களது பதவிகள் 8

5. 2021இல் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள் 12

5.1 பட்டதாரி திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களின் வினைத்திறனான பயன்பாடு மீதான கற்கை 12

5.2 அரசதுறையில் உள்ள தொழில்நுட்ப அலுவலர்களின் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு, விதப்புரையுடன் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கான கற்கை 14

5.3 தேசிய மனிதவள அபிவிருத்திக் கொள்கையை உருவாக்கல் 17

5.4 தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் புள்ளிவிபர சஞ்சிகை 20

6. தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் 2021 ஆண்டின் வெளியீடுகள் 20

7. 31 டிசம்பர் 2021ஆம் திகதியன்று நிதியியல் நிலைமைக்கூற்று 21

8. 31 டிசம்பர் 2021இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை கூற்று 23

9. 2021 டிசம்பர் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு மாற்றக்கூற்று 24

10. காசுப் பாய்ச்சல் கூற்று 25

11. குறிப்புகள் 26

12. குறிப்புகள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம், விளக்கக் குறிப்புகள் 32

13. கணக்காய்வு அறிக்கை 36

1. நிறுவன பின்னணி மற்றும் நோக்கம்

மனித வள அபிவிருத்திக்கான முக்கிய பணிப்பொறுப்பை நிறைவேற்றுவதற்காக 1987 / 18 இலக்க தேசிய மனித வள அபிவிருத்தி சபை சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை நிறுவப்பட்டது. மனித வள அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளை உருவாக்குதல், மேம்படுத்துதல் மற்றும் அமுல்படுத்தலுக்கு உதவுதல் மற்றும் அந்த சபைக்கு உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய மனித வள அபிவிருத்தியின் அனைத்து செயற்பாடுகளுக்கும் முன்னுரிமை வழங்குவதன் மூலம் அனைத்து பணிப்பொறுப்புகளிலும் முதன்மையான வகிபாகத்தை கொண்டுள்ளது. மனித வள அபிவிருத்தி தொடர்பான கொள்கை ரீதியான வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கும், அரசாங்கத்துக்கும் வழங்குதல் சபையின் பிரதான நோக்கமாகும்.

1.1 நிறுவனத்தின் அறிமுகம்

தேசிய மட்டத்திலான ஆலோசனை சபையாக 1987 ஜுன் 05 ஆம் திகதி இளைஞர் விவகார அமைச்சின் ஒரு அலகாக இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை ஆரம்பமானது. பின்னர் அது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் விடய பரப்பின் கீழ் 1987 / 18 இலக்க தேசிய மனித வள அபிவிருத்தி சபை சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய சுயாதீனமான நியதி சபையாக நிறுவப்பட்டது. அதிலிருந்து, அதாவது 2000 ஆண்டிலிருந்து இந்த நிறுவனம் தொழில்நுட்ப கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டது. குறுகிய காலத்தினுள் மீண்டும் 2001 ஆண்டில் அது கல்வி மற்றும் கலாச்சார விவகார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. அதன் பின்னர், அரசாங்கம் மாற்றமடைந்த பின்னர் திறன்கள் அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அமைச்சின் கீழ் நிறுவனம் கொண்டுவரப்பட்டது. குறுகிய காலத்தினுள் பல அமைச்சுக்களின் கீழ் செயற்பட்ட இந்த நிறுவனம் தற்போது அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகிறது.

1.2 நோக்கு

எமது ஊழியர் படையின் எதிர்காலம் தயார்

1.3 பணிக்கூற்று

மனித வள அபிவிருத்தியுடன் தொடர்புடைய வினைத்திறனான கொள்கைகள் மற்றும் புத்தாக்க தந்திரோபாயங்களை உருவாக்குதல், அமுல்படுத்தல், மேம்படுத்தல் மற்றும் இலகுபடுத்துதல்.

1.4 குறிக்கோள்

மனித வள அபிவிருத்தி தொடர்பில் கொள்கை ரீதியான வழிகாட்டல்களை அரசுக்கு வழங்குவதற்கு பொருத்தமான சட்டக கட்டமைப்பை உருவாக்குதல் இலங்கை மனித வள அபிவிருத்தி சபையின் குறிக்கோளாகும். மனித வள அபிவிருத்தி, செயன்முறைகளை திட்டமிடுதல், கொள்கை மீளாய்வு மற்றும் மனித வள ஆற்றலை அதிகரிப்பதற்கும் இந்த நிறுவனம் பொறுப்பாக இருக்கிறது.

சபையின் கடமைகள் மற்றும் செயற்பாடுகள் பின்வருமாறானதாகும் :

I. பின்வரும் மனித வள அபிவிருத்தி தொடர்பான தர்க்கரீதியான நியாயப்படுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு அடங்கலாக அனைத்து துறைகளிலும் தேசிய மனித வள கொள்கை தொடர்பில் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல்.
   a. தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி
   b. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தின் பிரயோகம்
   c. வாழ்க்கை தரத்தை உயர்த்துதல்
   d. பலவீனமான குழு நபர்களுக்கான சமூக பாதுகாப்பை வடிவமைத்தல்
   e. பொருளாதார மறுசீரமைப்புடன் உரிமைகளை பேணுதல்

II. தேசிய கொள்கைக்கு ஏற்புடையதாக அரசுக்கு சமர்ப்பிப்பதற்கான மனித வள அபிவிருத்தி தொடர்பான திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் அமைச்சருக்கு விதந்துரை செய்தல்.

III. காலத்துக்கு காலம் மனித வள அபிவிருத்தி கொள்கை, அமுல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்தட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் பரிசீலித்தல், தேவையான சந்தர்ப்பங்களில் அவ்வாறான கொள்கை மாற்றங்கள், திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமைச்சருக்கு விதந்துரை வழங்குதல்

IV. அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வள அபிவிருத்தி திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை மேற்பார்வை செய்தல், மற்றும்

V. இந்த சட்டத்தின் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயம் தொடர்பிலுமான எந்தவொரு கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக, ஏனைய எந்தவொரு அமைச்சருக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயத்துக்கு அவ்வாறான கருத்திட்டம் தொடர்பானதாக இருக்கும் போது, அந்த அமைச்சரின் ஒத்திசைவுடன் அமுல்படுத்தப்பட வேண்டும். மற்றும்

VI. சபையின் கருத்துக்கு அமைய தேசிய நோக்கங்களுக்கு ஏற்புடையதாக மனித வள அபிவிருத்திக்கு தேவையான அல்லது சாதகமான அல்லது எதிர்பாராது தோன்றும் ஏனைய அனைத்து கருமங்களையும் மேற்கொள்ளுதல்.

1.5 சபையின் அதிகாரம்

1997 / 18 இலக்க இலங்கை தேசிய மனித அபிவிருத்தி சபை சட்டத்தின் 16 (2) (1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய சபையின் அதிகாரம் பின்வருமாறானதாகும்,

a. சபையின் கருமங்களை நிறைவேற்றுவதற்கு தேவையாக இருக்கக்கூடிய அளவீடு, புலனாய்வு கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல்.

b. மனித வள அபிவிருத்தியுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பில் விஷேட நிபுணர்கள், தொழில்வாண்மையாளர்கள் அல்லது சாதாரண மக்களின் கருத்தை கேட்கும் நோக்குடன் பொது அல்லது தனிப்பட்ட கலந்துரையாடல்களை நடத்துதல்.

c. இலங்கைக்கு வெளியே சர்வதேச நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புகளுடன் தொடர்புகளை உருவாக்குதல் மற்றும் பேணிவருதல்

d. இந்த சட்டத்தின் கீழ் அந்த கருமங்களை நிறைவேற்றுவதற்கு தேவையாக இருக்கக்கூடிய ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளை எட்டுவதற்கும் மேற்கொள்வதற்கும்

e. நிறுவனங்கள் அல்லது தனிநபர்கள் இலங்கையில் அல்லது வெளிநாட்டில் மனித வள அபிவிருத்தி தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ஏற்பாடு செய்தல்

f. இலங்கை மற்றும் ஏனைய நாடுகளில் மனித வள அபிவிருத்தி மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல் தரவு வங்கியை நிறுவுதல் மற்றும் பேணி வருதல்

g. ஏதாவதொரு வங்கியில் அல்லது வங்கிகளில் நடைமுறை, சேமிப்பு அல்லது வைப்பு கணக்குகளை திறத்தல் மற்றும் பேணி வருதல்

h. அசையும் மற்றும் அசையா மானியங்கள் மற்றும் நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளுதல், பெற்றுக்கொள்ளுதல்.

i. மனித வள அபிவிருத்தியின் அனைத்து பிரிவுகள் தொடர்பாகவும் விஷேட நிபுணத்துவம் கொண்ட குழாத்தை விருத்தி செய்யும் நோக்குடன், அந்த அலுவலர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுத்தல்.

j. அந்த கருமங்களை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கு தேவையான அவ்வாறான குழுக்கள், நிபுணத்துவ குழுக்கள் மற்றும் ஆலோசனை நிறுவனங்களை நியமித்தல்.

k. தேவையானதென சபையால் கருதப்படும் புள்ளிவிபரங்கள் மற்றும் தரவுகளை அமைச்சுக்கள், அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதி சபைகள், மாகாண சபைகள், உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களிடமிருந்து கோருதல் மற்றும் பெற்றுக்கொள்ளுதல்.

l. சபையின் கருத்துக்கு அமைய, சபையின் கருமங்கள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல், பிரயோகித்தல் மற்றும் செயலாற்றுகைக்கு தேவையானதென கருதப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்.

2. மனிதவள அபிவிருத்தி சபையின் நிறுவனக் கட்டமைப்பு

இந்த சபையானது அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபையின் கீழ் தொழிற்படுகின்றது. அத்துடன் உள்;ராட்சியானது 1997 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்பட்ட தலைவர் மற்றும் இருபது உறுப்பினர்களைக் கொண்டது. அவர்களில் பதினைந்து (15) நபர்கள் முன்னாள் அதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள் மீதமுள்ள ஐந்து உறுப்பினர்கள் பொருத்தமான நிறுவனங்களை சேர்ந்தவர்களாகவும் அதற்கு மேலதிகமாக சம்பந்தப்பட்ட துறைகளில் காணப்படும் அனுபவம் மற்றும் திறன்களைக் கருத்தில் கொண்டு 05 உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள் அவர்களில் இரண்டு நபர்கள் தனியார் துறையைச் சேர்ந்தவர்கள். எனினும், பதவிவழி அங்கத்தவர்களின் எண்ணிக்கை இலங்கை சோசலிசக் குடியரசு யாப்பின் 44,45 மற்றும் 47ஆம் பந்திகளின் கீழ் மேற்கொள்ளப்படும். விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அவர்களில் ஒருவரை நிறைவேற்று தலைவராக நியமிக்க சட்டத்தில் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மேலும் தலைவர் பிரதம நிறைவேற்ற அலுவலர் ஆவார். 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் திகதி 2153/12 இலக்க இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வகுக்கப்பட்டுள்ள விடயத்தின் பிரகாரம் 31.12.2021 இல் ஆளுநர்கள் குழுவின் அமைப்பு பின்வருமாறு

சட்டத்தின் 3 (1) (a) தொடக்கம் (p) வரையான பிரிவுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள்

1. பேராசிரியர். கபில பெரேரா, செயலாளர், உயர் கல்வி மற்றும் தொழில்நுட்பத்திற்குப் பொறுப்பான அமைச்சு
2. திரு. எம்.பி.டி.யு.கே. மாப்பா பத்திரண, செயலாளர், தொழில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு
3. திரு. ஜே.ஜே. ரட்ணசிறி, செயலாளர், பொது நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு
4. மருத்துவ கலாநிதி. (மேஜர் ஜெனரல் - ஓய்வுபெற்ற) எஸ்.எச். முனசிங்ஹ, செயலாளர், சுகாதார விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு
5. ஜென.தயா ரத்நாயக்க, செயலாளர், கைத்தொழில் அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு
6. பேராசிரியர.உடித் ஜயசிங்க, செயலாளர், விவசாய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு
7. திரு. அனுராத விஜேகோன், செயலாளர், இளைஞர் விவகாரத்திற்குப் பொறுப்பான அமைச்சு
8. திரு.பி.கே.யு.ஏ.விக்ரமசிங்க, தலைவர், மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
9. டாக்டர்.கே.ஏ.லலிததீர, பணிப்பாளர் நாயகம், மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு
10. பேராசிரியர். ஹரிஸ்சந்ர அபேகுணவர்த்தன, தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
11. பேராசிரியர். சம்பத் அமரதுங்க, தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
12. திரு. தரங்க நலீன் கம்லத், தலைவர், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை
13. திருமதி.ஜே.ஜி.டி.சேனாநாயக்க, பணிப்பாளர் (பதில்), அரச தொழில்முயற்சித் திணைக்களம், நிதி அமைச்சு, செயலாளரின் பிரதிநிதி, நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு

சட்டத்தின் 3 (2) (O) பிரிவுகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நியமனங்கள்

14. திரு.கே.ஆர்.உடுவாவெல, தலைவர் (பதில்), இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை
15. திரு. பி. ரணேபுர, ஓய்வுபெற்ற செயலாளர் (நியமன உறுப்பினர்)
16. திரு. மகேஸ் கொட்டுவெல, சட்டத்தரணி (நியமன உறுப்பினர்)
17. சத்துரங்க கெப்பட்டிகம், இரப்பை குடல் அறிவைச்சிகிச்சை நிபுணர் (நியமன உறுப்பினர்)
18. டாக்டர் (திருமதி) ரணலி பெரேரா, பெற்றோலிய நிபுணர் (நியமன உறுப்பினர்)

2021 ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபைக் கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர்களின் வரவு

நியமன உறுப்பினர்		13.07.2021	16.12.2021
01.	திரு.கே.ஆர்.உடுவாவெல, தலைவர் (பதில்), இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை	√	√
02.	பேராசிரியர். கபில பெரேரா, செயலாளர், உயர் கல்வி மற்றும் தொழில்நுட்பத்திற்குப் பொறுப்பான அமைச்சு	*	-
03.	திரு. எம்.பி.டி.யு.கே. மாப்பா பத்திரண, செயலாளர், தொழில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு	√	-
04.	திரு. ஜே.ஜே. ரட்ணசிறி, செயலாளர், பொது நிர்வாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு	-	-
05.	மருத்துவ கலாநிதி. (மேஜர் ஜெனரல் - ஓய்வுபெற்ற) எஸ்.எச். முனசிங்ஹ, செயலாளர், சுகாதார விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு	√	-
06.	ஜென.தயா ரத்நாயக்க, செயலாளர், கைத்தொழில் அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு	√	√
07.	பேராசிரியர.உடித் ஜயசிங்க, செயலாளர், விவசாய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு	-	-
08.	திரு. அனுராதா விஜேகோன், செயலாளர், இளைஞர் விவகாரத்திற்குப் பொறுப்பான அமைச்சு	-	-
09.	திரு.பி.கே.யு.ஏ.விக்ரமசிங்க, தலைவர், மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு	-	√
10.	டாக்டர்.கே.ஏ.லலிததீர, பணிப்பாளர் நாயகம், மூன்றாம்நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு	√	√
11.	பேராசிரியர். ஹரிஸ்சந்ர அபேகுணவர்த்தன, தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு	-	-
12.	பேராசிரியர். சம்பத் அமரதுங்க, தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு	√	√
13.	திரு. தரங்க நலீன் கம்லத், தலைவர், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை	√	-
14.	திருமதி.ஜே.ஜி.டி.சேனாநாயக்க, பணிப்பாளர் (பதில்), அரச தொழில்முயற்சித் திணைக்களம், நிதி அமைச்சு, செயலாளரின் பிரதிநிதி, நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சு	√	√
15.	திரு. பி. ரணேபுர, ஓய்வுபெற்ற செயலாளர் (நியமன உறுப்பினர்)	√	√
16.	திரு. மகேஸ் கொட்டுவெல, சட்டத்தரணி (நியமன உறுப்பினர்)	√	√
17.	சத்துரங்க கெப்பட்டிகம், இரப்பை குடல் அறிவைச்சிகிச்சை நிபுணர் (நியமன உறுப்பினர்)	√	√
18.	டாக்டர் (திருமதி) ரணலி பெரேரா, பெற்றோலிய நிபுணர் (நியமன உறுப்பினர்)	√	√

Note : √ பங்கேற்றார்

* பிரதிநிதி பங்கேற்றார்.

\- சமூகமளிக்கவில்லை.

தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் சபைக் கூட்டங்கள்

2021ஆம் ஆண்டின் தொடக்கத்தில், முன்னாள் தலைவர் திரு பத்மசிறி ஜயமானவின் திடீர் மறைவினால் தேசிய மனிதவள அபிவிருத்திச் சபையின் தலைவர் பதவி வெற்றிடமாக இருந்தது. இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபைச் சட்டத்தின் 3(2)(O) பிரிவுக்கு அமைவாக, அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர், கௌரவ ஜானக பண்டார தென்னகோன் அவர்கள் சபையின் 01 ஜுன் 2021ஆம் திகதியில் இருந்து பயனுறுதி பெறும் வகையில் தலைவராக (பதில்) செயற்படுவதற்கு திரு.கே.ஆர்.உடுவாவெலவை நியமித்தார்.

2021ஆம் ஆண்டில் தேசிய மனிதவள அபிவிருத்தி சபையில் இரண்டு சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டது. 2021இல் சபையால் குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்பான சிறப்பம்சங்கள் பின்வருமாறு,

1. "சுபீட்சத்தின் நோக்கு" இற்கு இணங்கும் வகையில் தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் கொள்கைகளை இற்றைப்படுத்தல்.

இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் குழு தேசிய மனிதவள அபிவிருத்திக் கொள்கையை மேம்படுத்துவதற்கும் புதிய கொள்கையைத் தயாரிப்பதற்குமான வரைவு ஆவணத்தைத் தயாரித்துள்ளது. திட்டத்தை செயற்படுத்துவதற்கு ஆலோசனைக் குழு மற்றும் செயற்பாட்டுக் குழுவை நியமிப்பதற்கு சபை அங்கீகாரத்தை வழங்கியுள்ளது.

2. பட்டதாரித் திட்டத்தின் கீழ் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்களை வினைத்திறனுடன் பயன்படுத்துதல் தொடர்பான கற்கை

இந்த முயற்சியின் முக்கியத்துவத்தை சபை அறிந்துகொண்டதனால், இந்த ஆய்வின் முக்கிய நோக்கம், புதிதாக நியமிக்கப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு விதப்புரைகளை பரிந்துரைத்தல் மற்றும் வினைத்திறனான பயன்பாட்டை ஆராய்வதாகும்.

3. அரச துறையில் தொழில்நுட்ப அலுவலர் பதவிகளில் காணப்படும் பற்றாக்குறையை, காணப்படுவதற்கான காரணத்தை அடையாளம் காணல் மற்றும் தீர்வு / விதப்புரை மீதான கற்கை

இந்தக் கற்கையின் பிரதான நோக்கம் தற்போதுள்ள தொழில்நுட்ப அலுவலர்களின் பற்றாக்குறையையும் அரச துறையில் உள்ள தொழில்நுட்ப அலுவலர் பதவிகளின் பற்றாக்குறை அதிகரிப்பதற்கு தாக்கம் விளைவிக்கும் காரணிகளையும் அடையாளம் காணல் ஆகும். அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அரசாங்கத்தின் அமைச்சின் செயலாளருக்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக சமர்ப்பிப்பதற்கு சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

4. மனிதவள அபிவிருத்தி மீது நிபுணர் குழாம், குழுக்கள் மற்றும் ஆலோசனையாளர்களை உருவாக்கல்

மனிதவள அபிவிருத்தி மீதான நிபுணர் குழு, குழுக்கள் மற்றும் ஆலோசனையாளர்களை நியமிப்பதற்கு இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கம், இலங்கை தேசிய மனிதவள அபிவிருத்தி சபைச் சட்டத்தினால் வழங்கப்பட்டுள்ள அவசியமானபோது அவர்களுடைய சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு மனிதவள அபிவிருத்தி மீதான நிபுணர் குழு, குழுக்கள் மற்றும் ஆலோசனையாளர்களை உருவாக்குவதல் ஆகும்.

3. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபை – நிறுவன கட்டமைப்பு



4. இலங்கை தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் ஆளணி மற்றும் அவர்களது பதவிகள்

பதவி நிலை	அனுமதிக்கப்பட்ட ஆளணி	31.12.2021 இல் பணியாளர்கள்	31.12.2021 இல் பதவி வெற்றிடம்	பெயர்
தவிசாளர்	01	-	01	-
பணிப்பாளர்	01		01	-
உதவிப் பணிப்பாளர்	03	02	01	திருமதி. ஜெ.ஏ.சி.பீ. ஜயசிங்க திருமதி. எஸ்.எஸ். களுஆராச்சி
சபையின் செயலாளர்/ சட்ட அலுவலர்	01	01	-	திருமதி. ஜி.ஜி. கசுனி உத்பலா
ஆராய்ச்சி அலுவலர்	04	04	-	திரு. த. செந்தில்நாதன் செல்வி. என்.டி.எதிரசிங்கே திருமதி. ஆர்.டி.சி.எஸ். ராஜபக்ச செல்வி. யு.எம். வீரசேன
நிர்வாக உத்தியோகத்தர்	01	01	-	திருமதி.கே.வி.எஸ். எரங்கா
மொழிபெயர்ப்பாளர்	01	-	01	-
அபிவிருத்தி உத்தியோகத்தர்	04	01	03	திரு.கெ.பி.பி.பெரேரா
தவிசாளர் பீ.ஏ	01	-	01	
முகாமைத்துவ உதவியாளர்	08	05	03	திரு.சி.ஆர்.மத்தகே திருமதி.எம்.ஜி.என். டில்ஹரி திருமதி. கே.சி.முத்துமால திருமதி. ஆஸா எதிரசிங்க திருமதி. ஜி.எம். சத்தமங்கல
சாரதி	04	04	-	திரு.ஜி.எம்.பின்னதுவ திரு.டெறன்ஸ் பியால் திரு.ஆர்.சி.ஆர். ஜயவர்த்தன திரு.ஹயான் ஜீவந்த
அலுவலக உதவியாளர்	04	03	01	திரு.என்.ஜி.நதுன் மதுரங்க திரு.டபிள்யு.ஆர்.ஏ.பிரினஸ் கிரான்வில் செல்வி.ஏ.நயனா பிரியதர்சினி
மொத்தம்	**33**	**21**	**12**	

4.1 ஆட்சேர்ப்புகள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டிற்கு அமைவாக சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணி 33 ஆகும். ஆனால் 31.12.2021 இல் ஆளணி 21 ஆக இருந்தது.

அரசாங்கத்தினால் ஆட்சேர்ப்பு இடைநிறுத்தப்பட்டதனால் இந்த ஆண்டில் எந்தவொரு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப் பட்டிருக்கவில்லை. திரு சிசிர கொடிகார தலைவர்/ பிரதான நிறைவேற்று அதிகாரியாக 08.04.2021ஆம் திகதியிலிருந்து நியமிக்கப்பட்டதுடன் அவர் 31.05.2021ஆம் திகதியில் இருந்து பதவியிலிருந்து விலகினார். திரு கே.ஆர்.உடுவாவெல பதில் தலைவராக நியமிக்கப்பட்டார்.

4.2 இராஜினாமாக்கள்

பெயர்	பதவி	பதவி விலகிய திகதி
1. செல்வி. ஹிருணி சமோதி 2. திரு.கே.ஏ.லலிதலீர	உதவிப் பணிப்பாளர் பணிப்பாளர்	20.03.2021 26.04.2021

4.3 2021 ஆம் ஆண்டு காலத்தில் பதில் கடமையாற்ற / அணவல் செய்வதற்கு சபையினால் தெரிவு செய்யப்பட்ட அலுவலர்கள்.

பெயர்	பதவி	நியமனத் திகதி
திருமதி. ஜெ.ஏ.சி.பி.ஜெயசிங்கே	பணிப்பாளர் (பதில் கடமை)	03.05.2021

4.4 உள்ளூர் பயிற்சி

பணியாளர்களின் பாட அறிவை மேம்படுத்தும் நோக்கில் மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில் அவர்களுக்கு உள்ளூர் பயிற்சி வழங்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் கலந்து கொண்ட அதிகாரிகளின் விபரங்கள் பின்வருமாறு.

பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் விபரங்கள்

திகதி	பயிற்சி நிகழ்ச்சியின் பெயர்	வள நபர்	நிறுவனம் மற்றும் பதவி
04/08/2021	தாபனக் கோவை மற்றும் நிதிப் பிரமாணம்	திரு.கே.வி.ஏ.டி.விஜயநாயக்க	முன்னாள் பணிப்பாளர் - (நிதி) (NIFNI)
12/08/2021	நேர்மறை சிந்திப்பு	திரு.மனோஜ் நடேசன்	பணிப்பாளர் (நிர்வாகம்) அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
18/08/2021	தகவல் அறியும் சட்டம்	திரு.பிரியந்த ரனசிங்க	முன்னாள் பணிப்பாளர் நாயகம் - வெகுஜன ஊடக அமைச்சு
23/08/2021	Zoom App தொடர்பான பிரயோகம்	செல்வி. வனுஜா சந்திரகுமார்	தகவல் தொழில்நுட்ப அலுவலர் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
27/08/2021	5S எண்ணக்கரு	செல்வி.கே.என்.எஸ்.பெரேரா	தேசிய உற்பத்தித்திறன் செயலகம்
30/08/2021	இன்றைய வாழ்க்கைக்கான சட்டம்	திரு.மகேஸ் கொடுவெல	NHRDC பணிப்பாளர் சபை அங்கத்தவர்/ சிரேஸ்ட வழக்கறிஞர்.
23/09/2021	வெளிநாட்டுக் கல்விக்கான சந்தர்ப்பங்கள்	செல்வி.எம்.எம்.கே.கிறிசாந்தி மீகஹபொல	பணிப்பாளர் - (வெளிநாட்டுக் கல்வி) உயர்கல்வி அமைச்சு
30/09/2021	அடிப்படை உரிமைகள் மற்றும் சட்டங்கள்	திரு.மகேஸ் கொதுவெல	NHRDC பணிப்பாளர் சபை அங்கத்தவர்/ சிரேஸ்ட வழக்கறிஞர்.
26/102021	மின்னஞ்சல் ஆசாரம் தொடர்பான விழிப்பூட்டல் அமர்வு	திரு.லலித் வடுகே மற்றும் செல்வி. இரேசா பண்டாரநாயக்க	பணிப்பாளர் - (கல்வி), கல்வி அமைச்சர், தகவல் தொழில்நுட்ப அலுவலர், கல்வி அமைச்சு
24/11/2021	வெற்றிகரமான தொழில்சார் வாழ்க்கைக்கான உளவியல் தொழில் வழிகாட்டல்	திரு.எல்.எல்.எச்.திலகரத்ன	மேலதிக செயலாளர், போக்குவரத்து அமைச்சர்
01/12/2021	தனியார் பல்கலைக்கழகங்கள் தொடர்பான விழிப்பூட்டல் அமர்வு	பேரா.நாலக ஜயகொடி	சாஜிஸ் கம்பஸ் உப வேந்தர்
30/12/2021	உற்பத்தித்திறன் எண்ணகருவினை அமுல்படுத்தல்	செல்வி.சாலிகா பெரேரா மற்றும் குமுதினி தன்கல	உற்பத்தித்திறன் அலுவலர், தேசிய உற்பத்தித்திறன் செயலகம்

4.5. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

2021 ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு இரு தடவை கூடியதுடன், பின்வரும் விடயங்கள் தொடர்பான முகாமைத்துவ தீர்மானங்களை சபைக்கு விதந்தரைத்தது.

- செயற்பாட்டுத் திட்டத்தின் முன்னேற்றம் - 2020
- உண்மையான நிதியியல் நிலமை – 2020
- கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை - 2020
- ஆண்டறிக்கையின் வரைவு – 2020
- திருத்தப்பட்ட செயற்பாட்டுத்திட்டம் - 2021
- திருத்தப்பட்ட பெறுகைத் திட்டம் - 2021
- பாதீட்டு ஒதுக்கீடு – 2022
- செயற்பாட்டுத்திட்டம் - 2022
- பெறுகைத் திட்டம் - 2022
- சபையை நிர்வகிப்பதற்கான பல்வேறு முகாமைத்துவ தீர்மானங்கள்

சபையின் பின்வரும் உறுப்பினர்கள் 2021 ஜனவரி 01ஆம் திகதியில் இருந்து 31 டிசம்பர் 2021 வரை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் அடங்கியிருந்தனர்.

❖ **09 மார்ச் 2021 – 1ஆவது கூட்டம்**

1. திருமதி.ஜே.டி.ஜி.சேனாநாயக்க, பணிப்பாளர்(பதில்), அரச தொழில்முயற்சித் திணைக்களம் - குழுவின் தலைவி
2. திரு.ஆர்.எச்.பியசேன – (சபையின் அங்கத்தவர்) – குழுவின் அங்கத்தவர்
3. திரு.ஜானக ஜயலத், பணிப்பாளர் நாயகம் (பதில்)/TVEC - குழுவின் அங்கத்தவர்
4. திருமதி.ஓ.பி.ஆர்.தமயந்தி, பிரதான உள்ளக கணக்காய்வாளர் - அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – அவதானிப்பாளர்
5. திருமதி.எல்.ஏ.ஜி.எஸ்.குணசேகர, கண்காய்வு அத்தியட்சகர், அரச கணக்காய்வு அலகு – அவதானிப்பாளர்

❖ **02 டிசம்பர் 2020 – இரண்டாவது கூட்டம்**

1. திருமதி.ஜே.டி.ஜி.சேனாநாயக்க, பணிப்பாளர்(பதில்), அரச தொழில்முயற்சித் திணைக்களம் - குழுவின் தலைவி
2. திரு.ஆர்.எச்.பியசேன – (சபையின் அங்கத்தவர்) – குழுவின் அங்கத்தவர்
3. திரு.கே.ஏ.லலிததீர, பணிப்பாளர் நாயகம் /TVEC - குழுவின் அங்கத்தவர்
4. திருமதி.ஓ.பி.ஆர்.தமயந்தி, பிரதான உள்ளக கணக்காய்வாளர் - அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு – அவதானிப்பாளர்
5. திருமதி.எல்.ஏ.ஜி.எஸ்.குணசேகர, கண்காய்வு அத்தியட்சகர், அரச கணக்காய்வு அலகு – அவதானிப்பாளர்

5. 2021இல் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

5.1 பட்டதாரி திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களின் வினைத்திறனான பயன்பாடு மீதான கற்கை 2020/21

திறமையான மற்றும் பயனுள்ள அரசதுறை பொருளாதார வளர்ச்சிக்கான அடித்தளத்தில் ஒரு முக்கிய அங்கமாகும். எனவே, ஒவ்வொரு அரசாங்கமும் தனது அரசதுறை மிகவும் திறமையான மற்றும் முழுமையாகப் பயன்படுத்தப்படும் ஊழியர்களைக் கொண்டதாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும். இலங்கையில் அரச துறை அபிவருத்தி உத்தியோகத்தர் பதவிகளில் நுழைவதற்கான அடிப்படை பல்கலைக்கழகப் பட்டம் அல்லது உயர் தேசிய டிப்ளோமா ஆகும். இதன் விளைவாக, இலங்கையில் அரச துறையானது கணிசமான பட்டதாரிகள் மற்றும் உயர் தேசிய டிப்ளோமாதாரிகளை உள்ளீர்க்கின்றது. அரசாங்கம் மற்றும் பல்கலைக்கழகங்கள், பட்டதாரிகளையும் தேசிய உயர் டிப்ளோமாதாரிகளையும் உள்ளீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்த போதிலும், வேலையின்மை என்பது அரச, பொருளியல் மற்றும் சமூகக் கலந்துரையாடல்களின் தலைப்பாக அமைந்துள்ளது.

21.12.2011 அன்று அரச சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்ட அலுவலர்களினது சேவையானது 14.02.2012ஆம் திகதியிடப்பட்ட 1745/11ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக நிறுவப்பட்டது. 01 ஒகஸ்ட் 2011ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் வேலையில்லாப் பட்டதாரிகள் அரச நிறுவனங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

அரச சேவை ஆணைக்குழுவினால் 05.09.2012ஆம் திகதியிடப்பட்ட 1744/31ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக 14.02.2012ஆம் திகதியிடப்பட்ட 1745/11ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக நிறுவப்பட்ட நிகழ்ச்சித்திட்ட அலுவலர்களினது சேவைக் குறிப்பானது அபிவிருத்தி அலுவலர் சேவை எனவும் நிகழ்ச்சித்திட்ட அலுவலர் எனக் குறிப்பிடப்பட்ட இடங்களில் எல்லாம் அபிவிருத்தி அலுவலர் எனவும் திருத்தப்பட்டது.

2020/2021 பட்டதாரித் திட்டத்தின் ஊடாக புதிதாக நியமிக்கப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கான பயனுள்ள பயன்பாட்டை ஆராய்வதும் பரிந்துரைகளை பரிந்துரைப்பதும் ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.

இந்த ஆய்வின் குறித்துரைக்கப்பட்ட நோக்கம்:

- புதிய நியமனத்துடன் அனுபவத்துடனான தொடர்பினைக் கற்றல்.
- கல்வித் தகைமை மற்றும் புதிய நியமனம் என்பவற்றுக்கு இடையிலான தொடர்பினை அடையாளம் காணல்.
- அவர்களுடைய சேவை வழங்கலின் போது அபிவிருத்தி அலுவலர்களினால் முகம்கொடுக்கும் சவால்களையும் தடைகளையும் அடையாளம் காணல்.
- பதவி வகிபாகத்தினை வழங்கும் போது பயிற்சியினது வினைத்திறனை அடையாளம் காணல்.
- செயலாற்றுகை மதிப்பீட்டின் வினைத்திறனை மீளாய்வு செய்தல்
- அபிவிருத்தி அலுவலர்களின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு விதப்புரைகளை பரிந்துரைத்தல்.

இந்த ஆய்வில் மாதிரி அலகுகளை தேர்ந்தெடுப்பதற்கு இலகு மாதிரி முறைமை பயன்படுத்தப்பட்டது. அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தகவலுக்கு அமைவாக, 2020/2021ஆம் ஆண்டு பட்டதாரித் திட்டத்தின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அபிவிருத்தி அலுவலர்களின் எண்ணிக்கை 3470ஆவதுடன் அவர்கள் பல்வேறுபட்ட நிறுவனங்களில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். மோர்கனின் அட்டவணையைப் பயன்படுத்தி மாதிரியின் குறைந்தபட்ச அளவு 5% வீத எல்லை வலுவாகக் கருதி 95% வீதம் நம்பிக்கை மட்டமாகத் தீர்மானிக்கப்பட்டது. அதனால், ஆய்வுக்கான மாதிரி அளவு நானூறு ஆகும்.

ஆரம்பத்தில் 25 மாவட்டங்களிலும் 2021/2021ஆம் ஆண்டு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட மொத்த பட்டதாரிகளினையும் உள்ளடக்குமாறு கற்கையினை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டது. ஆனால் நிலவும் கோவிட் 19 சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு கற்கையானது கொழும்பு மாவட்டத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது.

மாதிரியில் இருந்து தரவுகளைச் சேகரிப்பதற்கு 13 பிரதேச செயலகங்களில் உள்ள இணைப்பு அலுவலர்கள் பரிந்துரைக்கப்பட்டதுடன், கேள்விக்கொத்து விநியோகிக்கப்பட்டு சேகரிக்கப்பட்டது. 31 டிசம்பர் 2021இல் சேகரிக்கப்பட்ட தரவுகள் தரவுத்தளத்திற்கு உள்ளடக்கப்பட்டு, இக்கற்கையானது 2022இல் பூர்த்திசெய்யப்படும்.

5.2 அரசதுறையில் உள்ள தொழில்நுட்ப அலுவலர்களின் பற்றாக்குறையைக் குறைப்பதற்கு, விதப்புரையுடன் பிரச்சினைகளை அடையாளம் காண்பதற்கான கற்கை

தொழில்நுட்பத் தர அலுவலர்கள் என்பவர்கள் நிறுவனங்களில் நிறைவேற்றுத்தர வகிபாகத்திற்கு துணைபரியும் பல்-இலக்குகளைக் கொண்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்குப் பொறுப்பாக உள்ள அரச சேவை ஊழியர்கள் ஆவர். அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தகவலுக்கு அமைவாக, இலங்கை அரச துறையில் தொழில்நுட்ப தரப் பதவிகளுக்கு (தொழில்நுட்ப அலுவலர்கள் என விசேடமாக குறிப்பிடப்படும்) குறிப்பிடத்தக்களவு வெற்றிடங்கள் காணப்படுகின்றது. இது அரச துறை நிறுவனங்களின் சேவை வழங்கலில் பாரிய பிரச்சினையாக உள்ளது. தற்போதுள்ள பற்றாக்குறை, தொழில்நுட்ப அலுவலர் பதவிகளின் பற்றாக்குறையை ஏற்படுத்துவதற்கு முக்கிய செல்வாக்கு செலுத்திய காரணிகள் மற்றும் இலங்கை அரசதுறையில் தொழில்நுட்ப அலுவலர்களின் பற்றாக்குறையைக் குறைப்பதற்கான பரிந்துரைகளை மேற்கொள்வதற்கு தேசிய மனிதவள அபிவிருத்தி சபை நிபுணத்துவக் குழுவுடன் இணைந்து இந்தக் கற்கையை மேற்கொள்ளுகின்றது.

ஆரம்பத்தில், இலங்கை தொழில்நுட்ப சேவையானது 1977இல் இடைநிலை மட்ட ஒருங்கிணைந்த சேவையாக நிறுவப்பட்டதுடன் 01.07.1994இல் இலங்கை தொழில்நுட்ப சேவையாக மறுசீரமைக்கப்பட்டது. அதன்பின்னர், இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரச்சினைகளைத் தீரப்பதற்காக 2006இல் தொழில்நுட்ப சேவைச் சபை நிறுவப்பட்டது. அதன் பின்னர் தொழில்நுட்ப சேவைச் சபை இல்லாதொழிக்கப்பட்டு இலங்கை தொழில்நுட்ப சேவைப் பிரிவு உருவாக்கப்பட்டது. அதேவேளையில், ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டு, ஆலோசனைச் சபையினைக் கலந்தாலோசித்ததன் பின்னர் தொழில்நுட்ப அலுவலர்கள் தொடர்பாக (ஆட்சேர்ப்பு போன்றவை) அவசிய தீர்மானங்களை எடுப்பதற்கு ஒவ்வொரு நிறுவனத்திற்கு நியமன அதிகாரத்திற்கான அங்கீகாரத்தை அரச சேவை ஆணைக்குழு வழங்கியது.

இங்கே கிட்டத்தட்ட 159 தொழில் வகைகள் இலங்கை தொழில்நுட்ப சேவையின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், இக்கற்கையானது, சம்பளக் குறியீடு MN-03, MN-07 உடன் வரும் சிவில், பொறியியில் மற்றும் இலத்திரனியல் பரப்புகளில் விசேட நிபுணத்துவத்தைக் கொண்ட தொழில்நுட்ப அலுவலர் தொடர்பாகவே தனது கவனத்தைக் கொள்கின்றது.

இந்தக் கற்கை நோக்கத்தைப் பூர்த்திசெய்வதற்காக, பகுப்பாய்வு நோக்கத்திற்கு அடிப்படை மற்றும் இரண்டாந்தர தரவுகள் சேகரிக்கப்படுகின்றது. அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் தொழில்நுட்ப அலுவலர் தொடர்பான பணியாட்தொகுதி விபரங்கள் கிடைக்கப்பெறாமையினால், நிறைப்படுத்தப்பட்ட சராசரி முறைமை கணிப்பீட்டுக்காகப் பயன்படுத்தப்படுகின்றது. அடிப்படைத் தரவு சேகரிப்பின் கீழ் கட்டுநாயக்க இயந்திரவியல் தொழில்நுட்ப கல்லூரியில் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா பாடநெறியைப் பயின்று வெளியேறிய 2014 ஆம் ஆண்டு மாணவர்களிடமிருந்து எழுந்தமாறான

மாதிரிகளில் இருந்து கட்டமைக்கப்பட்ட தொலைபேசியின் ஊடான ஆய்வினை தேசிய மனிதவள அபிவிருத்தி சபையின் ஆராய்ச்சிக் குழு மேற்கொண்டதுடன் 98 பதிலளிப்புகள் பெறப்பட்டது.

இந்தக் கற்கையின் பகுப்பாய்வு மாகாண சபை முறைமை, மத்திய அரசாங்க முறைமை மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் முறையே 941,646 மற்றும் 1,024 வெற்றிடங்களை கற்கைக் காலத்தில் கொண்டிருந்ததுடன் மொத்தமாக 2,611 தொழில்நுட்ப அலுவலர் வெற்றிடங்கள் அரசதுறையில் 2019 முடிவில் காணப்பட்டது. தகவல் தொழில்நுட்ப வழங்கலைக் கருத்தில்கொள்கையில், தொழில்நுட்ப தரப் பதவிகளுக்கு தகைமைபெற்று 2019இல் 2,500 மாணவர்கள் வெளியேறியுள்ளனர் மற்றும் மாதிரி ஆய்வின்படி கற்று வெளியேறிய மாணவர்களுள் 13% வீதத்தினர் மட்டுமே அரச சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

தொலைபேசி கணக்கெடுப்புக்கு அமைவாக, தொழில்நுட்ப அலுவலர்களில் ஆண்களே ஆதிக்கம் செலுத்துவதாக ஆய்வு கண்டறிந்துள்ளது, அங்கு பதிலளித்தவர்களில் 71 சதவீதமானவர்கள் ஆண்களாவர். அத்துடன், அதிக எண்ணிக்கையிலான பதிலளித்தவர்கள் சிவில் எஞ்சினியரிங் துறையில் உள்ளனர். மொத்த பதிலளித்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் (89%) ஆய்வுக் காலத்தில் பணியமர்த்தப்பட்டவர்களாவர்.

தனியார் துறையில் தொழில்நுட்ப பதவிகளில் சேர்வதில் செல்வாக்கு செலுத்தும் சக்திவாய்ந்த காரணி “ அரசதுறையை விட தனியார் துறையில் ஈடுபடுவதற்கு அதிக வாய்ப்புகள் காணப்படுவதுடன் இலகுவாகவும் உள்ளது” என்பதாகும். தற்போது தனியார்துறையில் பணியாற்றும் தொழில்நுட்ப அலுவலர்களில் பெரும்பான்மையானவர்கள் எதிர்காலத்தில் அரசதுறையில் சேர்வதற்கு விருப்பத்தைக் கொண்டிருக்கவில்லை, அதேவேளையில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர்(39%) எதிர்காலத்தில் அரச துறையில் சேர்வதற்கு விருப்பத்தைக் கொண்டுள்ளனர். எதிர்காலத்தில் அரசதுறையில் சேர்வதற்கு விருப்பத்தைக் கொண்டிருப்பதற்கான முக்கிய காரணியாக தொழில் பாதுகாப்பு அமைந்துள்ளது. அதே காரணத்தையே தற்போது அரச சேவையில் உள்ளவர்களும் கொண்டுள்ளனர். தகவல்களைப் பகுப்பாய்வு செய்தபோது, கற்கை பல்வேறு பிரச்சினைகளை அடையாளம் கண்டுள்ளதுடன், சாத்தியமான விதப்புரைகளையும் வழங்கியுள்ளது.

பிரதான பிரச்சினைகள் மற்றும் விதப்புரைகள் பின்வருமாறு

பிரச்சினைகள்	விதப்புரைகள்
அரசதுறையில் தொழில்நுட்ப பதவிகளுக்கு தகைமையுடைய நபர்கள் போதியளவில் உள்வாங்கப்படவில்லை மற்றும் சேவையில் பயிலுனர்களைத் தக்கவைப்பது கடினமானதாகும்.	கேள்விக்கு ஏற்றவாறு தற்போதுள்ள வசதிகளைப் பயன்படுத்தி பயிற்சி அளவினை விரிவாக்கல் மற்றும் தொழில்சார் டிப்ளோமாவை (இலத்திரனியல், பொறியியல் மற்றும் சிவில் எஞ்சினியரிங்) வழங்கக்கூடிய அனைத்து ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கி அரச மற்றும் தனியார் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களை உருவாக்குதல்.
அரச துறையில் உள்ள தொழில்நுட்ப அலுவலர்களின் தற்போதைய பணியாட்தொகுதி விபரங்களை அடையாளம் காண்பதற்கு மத்தியமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமை/ அல்லது தரவுத்தளம் அபிவிருத்தி செய்யப்படவில்லை.	மத்திய, மாகாண அரசாங்கங்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் உள்ள தொழில்நுட்ப அலுவலர்களின் விபரங்களை சேகரித்து மத்தியமயப்படுத்தப்பட்ட தரவுத்தளத்தை நிறுவுதல் மற்றும் குறைந்தபட்சம் ஆண்டுதோறும் இற்றைப்படுத்தல்.
அரசதுறைகளில் தொழில்நுட்ப பதவிகளில் பெண்களின் பங்களிப்புக் குறைவாக உள்ளமை.	தொழில்நுட்ப அலுவலர் பதவிகளில் பாலின சமத்துவம் மற்றும் பெண்களை உள்ளீர்த்தலை முனைப்புறுத்தல்.
புதிதாக வெளியேறிய மாணவர்களுக்கு அரசதுறைகளில் தொழில்நுட்ப அலுவலர் பதவிகளைக் கண்டறிதல் கடினமாக அமைந்துள்ளது.	அரசதுறைகளில் உள்ள நிறுவனங்களின் தலைவர்கள் உரிய தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களுடன் தொடர்பினைப் பேணுதல் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனங்களில் இருந்து வெளியேறிய மாணவர்களை தொழில் சேவையின் போதானா பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு உடனடியாகத் திட்டமிடுதல்.

5.3 தேசிய மனிதவள அபிவிருத்திக் கொள்கையை உருவாக்கல்

1997 ஆண்டின் 18 இலக்க தேசிய மனித வள அபிவிருத்தி சபை சட்டத்தின் 14(i) பிரிவுக்கு அமைய, தொழில்வாய்ப்பு, பயிற்சி மற்றும் கல்வி தொடர்பாக துறைசார் மனித வள அபிவிருத்தி அல்லது அது தொடர்பான, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தைப் பாவித்தல், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், பாதிக்கப்படக்கூடிய குழு நபர்களின் சமூகப் பாதுகாப்பை திட்டமிடுதல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்பில் உரிமைகளை பேணிவருதல், தேசிய மனித வளக் கொள்கை தொடர்பாக தர்க்க ரீதியாக விளக்கமளித்தல் அடங்கலாக தொடர்புடைய அனைத்து துறைகளிலும் ஆலோசனை வழங்குதல் சபையின் கடமை மற்றும் பொறுப்பாகும்.

அரசின் புதிய நோக்குக்கு அமைய உள்ளடங்கும் விடயப் பரப்புக்கு அமைய, ‘‘சுபீட்சத்தின் நோக்கு’’ வகுக்கப்பட்ட தேசிய மனித வள அபிவிருத்திக் கொள்கையை வகுத்தல் உடனடித் தேவையாகும். அதற்கமைய, ‘‘சுபீட்சத்தின் நோக்கு’’ கொள்கைப் பிரகடனத்துக்கு அமைய பத்துப் பிரதான கொள்கைகளுக்கான பொறுப்பான அனைத்து நிறுவனங்களினதும் அங்கீகாரத்துடன் தனது கொள்கையை தயாரிக்கும் செயற்பாட்டில் தேசிய மனித வள அபிவிருத்தி சபை ஈடுபட்டுள்ளது.

தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் இலக்கு / குறிக்கோள்

தொழில்வாய்ப்பு

1. இலங்கையிலுள்ள அனைத்து பெண்கள் மற்றும் ஆண்களுக்கு முழுமையான, பயனுள்ள மற்றும் சுதந்திரமாகத் தெரிவு செய்யும் தொழில் பெறுதலை மேம்படுத்துதல்.
2. தனிநபர் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள சனத்தொகையை குறைப்பதன் ஊடாக வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்.
3. பேதங்கள் இன்றி அனைத்து ஊழியர்களுக்கும் இயன்றளவு உயர்ந்த பட்ச தொழில்வாய்ப்புகளை வழங்குதல்.

கல்வி மற்றும் பயிற்சி

1. உயர் திறமையுள்ள, உலகளாவிய ரீதியான போட்டித்தன்மையான, பல் திறன் மற்றும் வினைத்திறனான ஊழியப் படையை அபிவிருத்தி செய்தல்.
2. ஊழலற்ற, ஆன்மீக மேம்பாடு, சுற்றாடல் நேயம் மற்றும் ஒழுக்கநெறி மிக்க சமூகத்தை உருவாக்குதல்.
3. பாதிப்பு ஏற்படுத்தும் போதைப்பொருளில் இருந்து சிறுவர்கள் மற்றும் இளைஞர்களை பாதுகாப்பதற்காக உரிய கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு பொறிமுறையை உறுதி செய்தல்.

மக்கள் - மைய பொருளாதாரம்

1. சமகால மற்றும் எதிர்கால தலைமுறையின் நலனுக்காக பொருளாதார அபிவிருத்தியின் முழுமையான அணுகுமுறையை உருவாக்குதல்.
2. பொருளாதாரக் கொள்கைகளை விரைவாக அமுலாக்குவதன் ஊடாக வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்.

சமூக பாதுகாப்பு மற்றும் உரித்துக்கள்

1. பெண்கள், சிறுவர்கள், முதியோர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பின்தங்கிய குழுக்களிகளின் அடிப்டை உரிமைகள் மற்றும் விருப்புகளைப் பாதுகாத்தல்.
2. இணைய குற்றங்களிலிருந்து பிரஜைகளைப் பாதுகாத்தல்.

விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம்

1. தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தை நோக்கி இலங்கையின் மனித மூலதனத்தை அபிவிருத்தி செய்தல்.
2. பாதிக்கக்கூடிய மற்றும் எல்லை சமூகங்களுக்கான இலத்திரணியல் சேவை வழங்குவதனை உறுதிப்படுத்தல்.
3. அதிக உற்பத்தித்திறனுக்கான அறிவுசார் சொத்துரிமைகளை புதுமை மற்றும் பயன்படுத்துவதற்கான கலாச்சாரத்தை உருவாக்குதல்.

.

தேசிய மனித வள அபிவிருத்தித் திட்டத்தின் உத்தேச ஐந்து தூண்கள்

1. தொழில்வாய்ப்பு
2. கல்வி மற்றும் பயிற்சி
3. மக்கள் மைய பொருளாதாரம்
4. சமூக பாதுகாப்பு மற்றும் உரிமைகள்
5. விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கம்

தொடர்புடைய துறைகளின் நிபுணர்களை உள்ளடக்கிய ஆலோசனைக் குழு மற்றும் செயற்குழு தேசிய மனித வள அபிவிருத்தி சபையினால் நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுக்கள் ஊடாக மனித வள கொள்கை தயாரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அந்தக் கொள்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த பின்னர் மனித வள அபிவிருத்தி கொள்கை தேசிய மட்டத்திலும், துணை தேசிய மட்டத்திலும் எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய மனித வள அபிவிருத்தி சபையினால் அனைத்து துறைகளையும் உள்ளடக்கும் வகையில் கொள்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மனித வள கொள்கைத் திட்டம் வரைபு

இந்தக் கொள்கைத் திட்டத்தைத் தயாரிக்கும் போது, தேசிய மனித வள அபிவிருத்தி சபை NHRDC சட்டத்தின் கீழ்வரும் நம்பகமான துறைகள், பேண்தகு அபிவிருத்தி இலக்குகள், தேசிய மனிதவளம் மற்றும் தொழில்வாய்ப்பு (NHR & E) கொள்கையின் ஐந்து தூண்கள் மற்றும் "சுபீட்சத்தின் நோக்கு" தேசிய கொள்கைப் பிரகடனத்தின் ஒன்பது தூண்களாக கருதப்படுகின்றன.

கொவிட் - 19 தொற்றுநோய் மற்றும் நிலவும் சுகாதார வரையறைகள் காரணமாக நிபுணத்துவ குழுக்களை பௌதீக ரீதியில் ஒன்று சேர்ப்பதில் இடையூறு நிலவியது.



உரு 1 : திட்டம் வரைபு

5.4 தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் புள்ளிவிபர சஞ்சிகை

தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் நோக்குக்கு அமைய, இலங்கையின் கல்வித் துறையுடன் தொடர்புடைய பங்குதாரர்களின் தகவல் இடைவெளியை நிரப்புவதற்காக வருடாந்த புள்ளிவிபர சஞ்சிகையை வெளியிடுவதற்கு தேசிய மனித வள அபிவிருத்தி சபை முகாமைத்துவம் தீர்மானித்தது. அது தொடர்பாக 2015 ஆம் ஆண்டிலிருந்து நான்கு சஞ்சிகைகள் வெளியிடப்பட்டுள்ளன. பிந்திய வெளியீடு 2021 ஆண்டு வெளியிடப்பட்டது.

அந்த வெளியீடுகளில் பொதுக் கல்வி, மூன்றாம் நிலை தொழிற்பயிற்சி மற்றும் உயர் கல்வித் துறை தொடர்பான முக்கியமான புள்ளிவிபரங்கள் அடங்கியுள்ளன. இணைய தளங்களில் உள்ள இரண்டாம் நிலை தரவு மூலங்கள், இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கைகள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக புள்ளிவிபரங்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அனைத்துத் தரவுகளும் சேகரிக்கப்பட்டுள்ளன. இலங்கையின் கல்வித் துறை தொடர்பில் அக்கறை கொண்டுள்ள ஆராய்ச்சியாளர்கள், கொள்கை வகுப்பாளர்களுக்கு அந்த சஞ்சிகைகளின் தரவுகள் பயனுள்ளதாக அமையும்.

6. தேசிய மனித வள அபிவிருத்தி சபையின் 2021 ஆண்டின் வெளியீடுகள்

2021 ஆண்டின் வெளியீடுகள், அறிக்கைகளின் படங்கள் கீழே காட்டப்படுகின்றன.



அரசதுறையில் உள்ள தொழில்நுட்ப அலுவலர்கள் தொடர்பான கற்கை



புள்ளிவிபர சஞ்சிகை



மனிதவள விழிப்பூட்டல்கள்

7. 31 டிசம்பர் 2021ஆம் திகதியன்று நிதியியல் நிலைமைக்கூற்று

இ.ரூபாவில

	குறிப்பு	2021		2020		மதிப்பீடு செய்யப்பட்டது
சொத்துகள்						
நடைமுறைச் சொத்துக்கள்						
காசு மற்றும் காசுக்கு சமனானவை	1	17,517,904.58		17,476,958.89		17,500,000.00
பெறுவனவுகள்	2	40,062.82		40,062.82		41,000.00
கையிருப்புகள்	3	1,080,696.56		788,136.66		1,100,000.00
முற்கொடுப்பனவுகள்	4	82,975.65		84,468.92		85,000.00
ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்	5	3,034,602.61		3,319,639.45		3,400,000.00
		21,756,242.22		**21,709,266.63**		**22,126,000.00**
நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை						
உட்கட்டமைப்பு, பொறி மற்றும் உபகரணங்கள்	6	8,412,437.23		9,950,577.86		9,000,000.00
வாகனங்கள்	6	-		1,449,060.65		-
மென்பொருள்		118,148.33		221,400.83		200,000.00
ஏனைய நிதியியல் சொத்துக்கள்	6	545,297.98		418,540.63		500,000.00
		9,075,883.54		12,039,579.97		9,700,000.00
மொத்தச் சொத்துகள்		**30,832,125.76**		**33,748,846.60**		**31,826,000.00**
பொறுப்புகள்						
நடைமுறைப் பொறுப்புகள்						
கொடுப்பனவுகள்	7	510,079.51		1,718,483.37		1,000,000.00
குறுகிய கால ஏற்பாடுகள்	8	396,642.82		1,116,242.82		500,000.00
